APPENDIX I.

[*Vide* answer to Starred Question No. 177 at page 559 supra.]

A.—(*a*) There were about 620 trainees undergoing training in the Training Centre in August 1965 in the Bharat Heavy Electricals, Limited, Tiruvarambur, Tiruchirappalli.

(*b*) Three trainees whose progress was unsatisfactory were discharged on the 16th August 1965 As a protest against this about 400 trainees abstained from classes from 17th to 20th August 1965 and organized demonstrations demanding the reinstatement of the discharged trainees. As the appeals made by the authorities had no effect, twenty-seven trainees, who had been participating in the demonstrations were discharged on the 20th August 1965 and were asked to quit the school premises. On their refusal to leave the place, they were taken into custody by the police. Most of the other trainees were then willing to resume studies. While they were screened and were taken to their classes after their signing an undertaking for good behaviour, a section of the trainees tried to force entry into the training centre. They were taken into police custody. All these trainees were later released after they gave an undertaking for good behaviour.

பதில் —(அ) திருச்சிராப்பள்ளி திருவெறும்பூர் பாரத் கனரக மின்சாரத் தொழிற்சாலை லிமிடெட்டைச் சேர்ந்த பயிற்சி நிலையத்தில் 1965 ஆகஸ்டில் சுமார் 620 பேர் பயிற்சி பெற்று வந்தனர்.

(இ) இவர்களில் மூன்று பேர் பயிற்சியில் திருப்திகரமான முன்னேற்றம் காட்டாததால் 1965 ஆகஸ்டு 16-ம் தேதி முதல் நிறுத்தப்பட்டனர். இதை எதிர்த்து, பயிற்சி பெற்று வந்த சுமார் 400 பேர் 1965 ஆகஸ்ட் 17-ம் தேதி முதல் 20-ம் தேதி வரை வகுப்புகளுக்குச் செல்லாமல் மேற்சொன்ன மூன்று பேரையும் மீண்டும் சேர்த்துக் கொள்ளுமாறு கிளர்ச்சிகள் செய்தனர். அவற்றை நிறுத்துமாறு அதிகாரிகள் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் பயனில்லாமற்போகவே, இக் கிளர்ச்சிகளில் கலந்து கொண்ட 27 பேர்களை ஆகஸ்ட் 20-ம் தேதியன்று நிறுத்தப்பட்டு பள்ளியை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டனர், அவர்கள் மறுத்ததால் போலீசார் அவர்களைக் கைது செய்தனர். பயிற்சி பெற்றுவந்த மற்றவர்களில் பெரும்பாலோர் வகுப்புகளுக்குச் செல்லத் தயாராக இருந்தனர். விசாரணை நடத்தி. அவர்களிடமிருந்து நன்னடத்தை உறுதிமொழி எழுதிப் பெற்றுக்கொண்ட பிறகு, அவர்களை வகுப்புகளுக்கு அழைத்துச் சென்றபோது, பயிற்சி பெற்று வந்தவர்களில் ஒரு பகுதியினர் பயிற்சி நிலையத்திற்குள் வலுமுறையில் நுழைய முயன்றனர். அவர்களைப் போலீசார் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் பின்னர் நன்னடத்தை உறுதிமொழி ஒன்றைக் கொடுத்ததன்மேல் விடுதலை செய்யப்பட்டனர்.